

## உளவியல் மஞ்சரி

மலர் 5 * ஆடி — ஆவணி * 1979 * இதழ் * 4 சதம் 60.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்னை அறிந்தால்...

"நான் நானே! நீ நீயே! நானும் நீயும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு எமது வாழ்வை அமைப்பதில்தான் அழகு இருக்கின்றது" என்கிறார் பிறிற்ஸ் பேள்ஸ் என்ற உளநூற் தத்துவர். இளைஞரை வாழவைக்க வெளிவரும் 'நானின் பணியும் இதுவே'. எனவேதான் இம்முறை 'நான்' "நான் யார்" என்ற கருவை மையமாகக் கொண்டு வெளிவருகின்றான். அவனின் வேண்டுகோள் என்ன?

வாழ்வில் வெற்றிகரமாக வீறுநடை போட வேண்டில் சமுதாயம் என்னும் வட்டத்தில் வாழும் ஒவ்வொரு மனிதனும் அடுத்தவன் யார்? என்பதை அறியத் துணிவதற்கு முன் தான் யார்? தனது தனிப்பண்புகள் என்ன. தனக்கே சொந்தமான தனிக் குணுதிசயங்கள் என்ன? என்பதை அறிந்து கொள்ளல் அவசியம். இத்தனையும் தனது வாசகர்களுடன் பகிர்ந்து ஒவ்வொரு மனிதனும் தான் வாழும் சமூகத்திலே எவ்வாறு அடுத்தவனுடன் தொடர்பை அமைக்க வேண்டும் என்ற ஆழமான உளநூற் தத்துவங்களை எடுத்தியம்புவதே இம்முறை நானின் குறிக்கோளாகும்.

நன்றி!

ஆசிரியர் குழு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வட்டம்...!



வாழ்வின் ஒவ்வொரு பருவத்திலும் அடியெடுத்து வைக்கும்போது மனிதன் முன்னைய நிலையை விட்டுப் புதிய நிலையை அடைகின்றான். குழந்தைப் பருவம் தாண்டிச்சிறுவனாகின்றான். சிறுவனாயிருந்து குமரப்பருவம் அடைகின்றான். குமரப்பருவத்திலிருந்து இளைஞனாகின்றான். பின் சில வருடங்களில் 'மனிதன்' (Adult) ஆகியவன் இறுதியாக முதுமையை எய்கின்றான், ஆம், இது வெறும் உடல் மாற்றம் அல்ல. வயது உயர்வு மட்டுமல்ல மாறாக முழுமனித வளர்ச்சி. அவன் வாழப் பிறந்தவன். வாழ்க்கையின் இலட்சியத்தை அடையவேண்டும். விரும்பினாலோ விரும்பாவிட்டாலோ ஒவ்வொரு மனிதனும் ஒரு வட்டத்திற்குள் தனது வாழ்க்கையை அமைக்கவேண்டும். இதை வாழ்க்கை வட்டம் என்றும் கூறலாம். இவ்வட்டம் சிறிதாக இருக்கலாம் பெரிதாக இருக்கலாம். மனிதனுக்கு மனிதன் வேறுபடலாம்.

வாழ்க்கை வட்டம் என்று நான் இங்கு கூறுவது வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் நாம் எதிர் நோக்கும்.

(1) வாழ்க்கை அனுபவங்கள் (Events)
(2) பொருட்கள் (Things)
(3) ஆட்கள் (Persons)

மனிதன் மட்டுமல்ல மற்றைய உயிரினங்கள் கூட இந்த வாழ்க்கை வட்டத்திற்கு விதிவிலக்கல்ல. ஆனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை அதை அணுகும் முறை, நோக்கம் என்பன முற்றிலும் வேறுபட்டவை.

**அனுபவங்கள்:**

வாழ்க்கை அனுபவங்கள், அல்லது நிகழ்ச்சிகள் ஒவ்வொரு கணத்திலும் எம்மை அணுகிக் கொண்டே இருக்கின்றன. எமக்கு என்னென்னவோ சொல்லிக் கொண்டே இருக்கின்றன. ஒரு காகத்தை எடுத்துக் கொண்டால் அது கருத்தரித்து விட்டது என்று உணர்ந்ததும் சென்று கூடுகட்டுகின்றது. இன்னும் மாரி காலம் அணுகுகின்றது என்று கண்ட தேனீக்கள் பொந்துகளையும், மறைவிடங்களையும் நாடிச் செல்கின்றன.

மனிதனும் கூட வாழ்க்கை அனுபவங்களுக்கும் காலத்தின் அறிகுறிகளுக்கும் (Signs of the Time) செவிமடுக்க வேண்டியவனாய் இருக்கின்றான். அவன் புத்தி, ஆக்கும் திறன் கொண்டு அவன் விதம் விதமாகச் செயற்படக்கூடியவன். அவன் சுதந்திரத்தைப் பாவித்து கண்மூடித்தனமாக எதையும் பொருட்படுத்தாமலும் இருக்கலாம் அன்றேல் ஈடுபாடுள்ளவாராக இருக்கலாம்.

வாழ்க்கையின் வட்டத்தினுள் எத்தனையோ குடும்ப சமுதாய பிரச்சினைகள், சம்பிரதாய பழக்க வழக்கங்கள், சட்டங்கள் ஒழுங்குகள், வாழ்கை முறைகள், சரித்திரங்கள் கூட புதிய புதிய பாணிகளிலே தோன்றி மறைந்து கொண்டு வருகின்றன. இவற்றில் ஒருவன் எவ்வளவு தூரம் ஈடுபாடுள்ளவனோ அவ்வளவு தூரம் அவன் வளரலாம், உயரலாம். அன்றேல் அவன் நடைப்பிணம் போன்று உயிரற்று நாறலாம். சமுதாயத்திற்கு தேவையற்ற சுமையாக விளங்கலாம்.

**பொருட்கள்:**

எம்மைச் சுற்றி எத்தனையோ பொருட்கள் இருக்கின்றன. எனக்குச் சொந்தமான பொருட்கள், என் குடும்பத்திற்கு, நாட்டிற்கு உலக சமுதாயம் முழுவதற்கும் சொந்தமான பொருட்கள். அதிவிலை கூடியதாக இருக்கலாம் விலை குறைந்ததாக இருக்கலாம். எவையாயிருப்பினும் நாம் அவற்றை தேடிக் கொள்ளும் முறை, பாவிக்கும் முறை என்பதுதான் எமது வளர்ச்சிக்கு வழிகோலும். பொருட்கள் மனிதனுக்காகவே ஒழிய மனிதன் பொருட்களுக்காகவல்ல, பொருட்களை மனிதன் ஆளவேண்டுமே ஒழிய மனிதனை பொருட்கள் ஆட்டிப்படைக்க, அடிமைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தக்கூடாது. பொருட்கள் எவருக்கும் நிறைவான திருப்தியை அளிப்பதல்ல. அதிகளவு பொருட்கள் அதிகளவு குழப்பத்தையே உண்டு பண்ணும். எனவே ஒருவனது வாழ்க்கை வட்டத்திற்குள் கிடைக்கும் பொருட்களைக் கொண்டு அவன் தனது வாழ்க்கையை வளம்படுத்தக் கற்றுக்கொண்டால், "போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து" என்பதற்கேற்ப வாழ்ந்தால் அவன் வளரலாம், உயரலாம்.

**ஆட்கள்:**

மனிதன் கருவாக உருவாகத் தேவையானவன் மனிதன். அவன் உயிருடன் வாழ, வளர, முழுமை பெற அவசியமானதும் மனிதன் ஒருவன் தன்னைப் புரிந்துகொள்ள, உறுதிகொள்ள, தனது வாழ்க்கைக்கு அர்த்தம் கொள்ள தனது, அறிவு, ஆற்றல் செல்வங்களைப் பயன்படுத்த, அவற்றை வழிப்படுத்த கொள்கைகள், இலட்சியம் வளங்க, அவன் வாழ்வை ஒளிர வைக்க, அவன் ஆளுமையை மிளிர வைக்க வேண்டியவன் மனிதன், மக்கள், மற்றவர்கள். ஆகவே எனது வாழ்க்கை வட்டத்தில் வாழும் மக்கள் அனைவரும் என்னுடன் ஏதோவிதத்தில் தொடர்பு கொண்டே இருக்கின்றனர்கள். ஆனால் எல்லோர் உறவும், தொடர்பும் ஒரேவகையான தல்ல. ஒரேதரமானதல்ல பெற்றோர்—பிள்ளை உறவு, பிள்ளைகளுக்கிடையில் விளங்கும் சகோதர உறவு, கணவன்-மனைவி உறவு, நண்பர்கள் மத்தியில் விளங்கும் உறவு. வியாபார ரீதியான உறவு. இனம், மொழி, வயது அடிப்படையான குழு—உறவு என விதம் விதமான பல்வேறு வகைப்பட்ட நிலையில் மனிதன் மனிதனோடு தொடர்பு கொள்கின்றன். மனிதன் ஒவ்வொருவரும் தனித்துவம் கொண்டவர். மனித சமூகத்திலே ஒருவரைப் போன்று சரிநிகரான இன்னொருவன் கிடையாது. ஆகவே எமது உறவுகள் பலவிதம் அதில் ஒவ்வொன்றும் ஒருவிதம். ஆகவே எவ்வளவு தூரம் மனிதன்+உடன், மனிதன்+க்காக ஈடுபடுகின்றோமோ அவ்வளவிற்கு நாம் வளருகின்றோம் உயருகின்றோம். ஆகவே இந்த வட்டில் வதியும் அனுபவங்களுக்கு செவிமடுத்து, பொருட்களைப் பயன்படுத்தி ஆட்களுடன் தொடர்பு கொண்டு வாழும்போது நாம்.

வளர்க்கின்றோம்—வளருகின்றோம்
உருவாக்குகின்றோம்—உருவாகின்றோம்
உயிர்கொடுக்கின்றோம்—உயிரூட்டப்படுகின்றோம்
நிறைவுசெய்கின்றோம்—நிறைவடைகின்றோம்

—ஜீவா—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாசகர் அறிமுகம்

'நான்' வாசகர்களே!

இதோ உங்கட்கோர் அரிய சந்தர்ப்பம். நீங்கள் யார்...? என்பதை, எம்முடனும் எம்வாசகர் குழாமுடனும், பகிர்ந்து கொள்ள விரும்புகிறீர்களா? உங்கள் விருப்பை நிறைவு செய்ய, இதோ 'வாசகர் அறிமுகத்தை' நான் அறிமுகம் செய்கின்றேன். அறிமுகம் செய்ய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

அம்மன் கோவில்வீதி,
கல்முனை—2

'நான்' ஆசிரியர் குழு,
அம்பிட்டியா, கண்டி.

அன்பின் ஆசிரியர் அவர்கட்கு;

நான் எழுதும் முதல்கடிதம் இது. இதனால் நான் உங்கட்கு புதியவன். ஆனாலும் உங்கள் 'நான்' பத்திரிகைக்கு, நான் நீண்டநாள் வாசகன். தொடர்ந்து பல நான்களை வாசிக்க எனக்கு சந்தர்ப்பம் கிட்டியது. இந்த சந்தர்ப்பத்தை, எனக்களித்தவர் பெரிய கல்லாற்றைச் சேர்ந்த நண்பர் லோகநாதன் என்பவர். எனக்கு இலக்கியங்களில் ஈடுபாடு கொள்வது, அதிக விருப்பம். அதிலும் உளவியல், தத்துவம் போன்ற துறைகளில் நூல்களைப் படிப்பதற்கு முன்னிற்பேன். நான் க. பொ. த. உயர்தரம் சித்தியடைந்துள்ளேன்.

நான் இதுவரை அதிகமாக வானொலிக்காகவே எழுதியுள்ளேன். கவிதை, சிறுகதை, கட்டுரை உருவகம் போன்ற இலக்கிய வடிவுகளில் எனது ஆக்கங்கள் அடிக்கடி வானொலியில் ஒலிபரப்பப்படுகின்றன. எனது உள்ளத்தைக் கவர்ந்த நான் சஞ்சிகைக்காகவும், இனிமேல் எனது பங்களிப்பாக, பல ஆக்கங்களை தொடர்ந்து

(14 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுரேஷ் நீ எங்கிருந்தாலும்!



அழகிய உருவம் நீண்டு ஒடுங்கிய புருவம் பாதம் படத் தொங்கும் நீண்ட நெடிய மயிர். இத்தனையும் கொண்டு ஆடவர் கண்கள் எத்தனைக்கோ அகப்பட்டவள் 'மஞ்சுளா.' அவளொரு பட்டதாரி மாணவியாக பேராதனைப் பல்கலைக் கழகத்திலே கலைப்பீடத்திலே பயின்று வந்தாள். "மஞ்சு" என்றால் கலைப்பீடமாணவர் அனைவருமே புரிவர். ஆரம்ப காலத்தில் கூத்தும் கும்மாளமுமாக திரிந்த மஞ்சுவின் உள்ளத்தில், காலாவட்டத்தில் ஏதோ ஒரு கவலை. அன்றைய அக்களிப்பு அவளது உள்ளத்தில் இல்லை. அவளது பார்வையிலே ஒருவித சோர்வு உணர்வு; பார்த்திருக்கப் பருத்து வந்த உடலிலே ஒரு வித தளர்வு. அவளது வார்த்தையிலே பகிடி பரிகாசம் எள்ளளவுதானும் இல்லை. கலைப்பீட வகுப்பு அனைத்துக்குமே குதூகலகுமரியாக விளங்கிய மஞ்சுவின் வாழ்க்கை ஏன் இவ்வாறாக மாற வேண்டுமென்பது ஏனைய மாணவர் மத்தியில் எழுந்த கேள்வி?....?...?

அன்று ஞாயிறு மாலை பல்கலைக்கழக மாணவர் கூட்டமாகவும், சோடியாகவும் வெளிக்கிளம்புகின்றனர். ஒரு சிலர் பூங்காவை நாடுகின்றனர், மற்றும் சிலர் சினிமாக் கொட்டகையைத் தஞ்சம் புகுகின்றனர். ஆனால் மஞ்சுவோ நீண்ட தனது கொண்டையைக் கொய்யாது, அழகாக வாரி விட்ட வண்ணம் நீலமெல்லிய சாரியை அணிந்து தனது கொஸ்டலின் முன்னிருந்த பெஞ்சிலே அமர்ந்த வண்ணம் இருக்க; மேலும் கீழுமாக சென்ற வண்ணம் இருக்கும் இளம் காதல் ஜோடிகளிலே அவள் கண்கள் செல்லுகின்றன. நீண்ட பெருமூச்சு; மெது மெதுவாகக் கண்களிலே பிதுங்கும் கண்ணீர்த் துளிகள். இத்தனைக்கும் காரணம் மூன்று வருடங்களுக்கு முன்பு அவளது இன்பத்திலும் துன்பத்திலும் ஒன்றறக் கலந்த "சுரேஷ்"

அது ஒரு நீண்ட தொடர் கதை. சுரேஷ் தனது உயர்

தரக் கல்வியை முடித்து விட்டு ஐந்து வருடங்களுக்கு முன்பு பேராதனை வளாகத்திலே மருத்துவபீட மாணவனாக வந்து சேர்ந்தான். அடுத்த இரண்டு வருடங்களின் பின்பு "மஞ்சு" அதே வளாகத்தில் கலைப்பீட மாணவியாக தெரிவு செய்யப்பட்டாள். அன்றொரு நாள் பௌர்ணமி தினம் வளாக மாணவர் அனைவருக்குமே விடுமுறை. புதிதாக பேராதனை வளாகம் புகும் மாணவ மாணவியர்க்கு முதல் படுவது பேராதனைப் பூங்கா. அதன் கவர்ச்சி மஞ்சுவையும் விட்டு வைக்கவில்லை. மஞ்சு தனது வகுப்பு மாணவியருடன் முதன் முதலாகப் பேராதனைப் பூங்காவை நாடுகின்றாள். அதே தினத்தன்று சுரேசும் தனது நண்பருடன் பொழுதுபோக்கிற்காக பூங்காவை நாடுகின்றான். எதிர்பாராத விதமாக அத்தனை மகளிருள்ளும் மஞ்சுவின் முகத்தைக் கண்ட சுரேசின் கண்கள் ஒரு கணம் லயித்து நிற்கின்றன. உணர்ச்சியோடு கலந்து ஒளிமயமாக வெளிவீசும் சுரேசின் பார்வைக்கு மஞ்சுவின் கண்கள் என்ன விதிவிலக்கா?...?...? இருவரின் கண் விழிகளும் ஒருவரையொருவர் மாறி மாறி பார்வையிடுகின்றனர். அந்த இரகசியப் பார்வையிலே இருவர் உள்ளங்களிலும் ஒரு வித தனித்துடிப்பு நாட்கள் உருண்டோடின. இருவரும் அடிக்கடி சந்திக்கும் சந்தர்ப்பம் அடுத்தடுத்து ஏற்பட்டன. மஞ்சுவின் மனத்திலோ பல்வேறு மனக்கோட்டைகள். தன்னை அன்பு கூரும் ஒரே ஒரு உள்ளம் சுரேஷ் என்று ஏங்கித் தவித்தாள். ஒருநாள் இந்த அன்பு நிறைவேறும், தன் அன்புக் கணவனாக சுரேசை உண்மையாகவே அடையத்தான் போகிறேன் என்று எண்ணி எண்ணி உள்ளம் மகிழ்ந்தாள். இத்தனையும் எண்ணி எண்ணி ஏங்கிய மஞ்சுவின் உள்ளத்தில் ஏதோ ஒரு இடி போன்ற நிகழ்ச்சி......

சுரேஷ் பல்கலைக்கழகப் படிப்பிலே இறுதி ஆண்டை முடித்துக் கொண்டிருந்தான். அவன் ஒரு பணம் படைத்த குடும்பத்திலே தோன்றியவன். பலரோடும் திறந்த மனதோடு பேசுபவன், பழகுபவன். அப்பேற்பட்ட அவனது போக்கிலே மஞ்சுவின் அழகு ஒரு கணம் அவனைக் கவர்ந்தாலும் அவளை மனைவியாக அடைய வேண்டுமென்ற அவா அவனை ஒரு போதும் எட்டவே இல்லை. இறுதியாண்டை முடித்த சுரேசுக்கு இலண்டன் பல்கலைக் கழகத்திலே படிப்புத் தொடரக் கூடிய வாய்ப்பு எட்டியது. மஞ்சுளா போன்ற பல நண்பர்களைப் பிரிவது அவனதுஉள்ளத்தை வருத்திய போதும் தனது மேற்படிப்பு பிற்கால வாழ்க்கையை மேலும் மேலும் மிளிர வைக்கப் போகின்றதே என்பதை எண்ணும் போது ஒரு கணம் இன்பமாக இருந்தது. வாரங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் நாட்சளாக நாட்கள் மணியாக மணிகள் நிமிடமாக ஈற்றிலே செக்கனுக சுரேசின் வெளியேறுதலைக் குறித்த வண்ணம் இருந்தன. ஏற்கனவே சுரேசின் வெளியேறுதலைக் கேட்டு வாடியிருந்த மஞ்சுவிற்கு பயணம் கூறவந்த சுரேசைக் கண்டதும் அவளால் சகிக்க முடியவில்லை. சுரேசின் கரங்களைப் பிடித்த வண்ணம் கண்ணீர் வடிக்கின்ருள். சுரேஸ்---சுரேஷ் என்று விம்முகின்ருள். ஆனுல் வார்த்தை வெளிவரவில்லை. மஞ்சுவின் பரிதாப நிலையைக் கண்ட சுரேசுக்கு என்ன செய்வதென்றே தென்படவில்லை. "மஞ்சு என்னைப் பிழையாகப் புரிந்து விட்டாய்" என்று கூற வார்த்தை வருகின்றன ஆனுல் அதனை அடக்கி ஒருவாறு சுரேஷ் விடைபெறுகின்ருன்....

சுரேசின் பிரிவின் பின் வரும் முதல் பௌர்ணமி தினத்தன்றுதான் மஞ்சு அந்த பெஞ்சில் அமர்கின்ருள். இத்தனையும் அவள் உள்ளத்தில் திக்குமிருகின்றன. தான் பிறந்த சமூகம் குடும்பம், சுரேசின் திறந்த உள்ளம் அத்தனையும் புரியாது "காதல்" என்ற கூட்டினுள்ளே தன்னையே புரிந்து வந்த மஞ்சுவிற்கு கிடைத்த பரிசுதான் இது. தன்னையிட்டுச் சிந்திக்கின்ருள், தான் யார் என்பதை உணருகிருள் பெண்ணினம் தன்னகத்தே கொண்டிருக்க வேண்டிய அச்சம், நாணம், பண்பு மடமை என்றெல்லாம் பெரியோர் கூறிப் போந்த நற்பண்புகளை ஒரு கணம் எடைபோடுகின்ருள். தன் உள்ளமைப்பின் இரகசியங்களை இட்டு ஆழச்சிந்தியாது செயலாற்றத் துணிவது, அன்பு வார்த்தைகளைக் கேட்டு மனம் இழகுவது. மதிமயங்குவது இத்தனையும் தன்னிடம் தென்படும் தவருன பண்புகள் என்பதை உணருகின்ருள். தன்னையிட்ட தெளிவான அறிவை தன் அனுபவ வாயிலாக அறிகின்ருள்.

சுரேசைப் பிரிந்த அவளது உள்ளத்திலே ஒரு விதப் புதிய உணர்வுகள் — புதுத் தெம்பு. உணர்ச்சியால் உந்தப்பட்டு வாழ்க்கையை வீணே சோகக் கூலாக ஏன் மாற்ற வேண்டும் என்று எண்ணுகின்ருள்.......

அவளது முகத்திலே ஒரு விதப் பொலிவு. "சுரேஷ் நீங்கள் எங்கிருந்தாலும் வாழ்க" என்று பலமுறை தனது உள்ளத்தினுள்ளே எதிரோலிக்கக் கேட்கின்ருள். துன்பக்கடலில் மூழ்கியிருந்த மஞ்சுவின் உள்ளத்தில் ஒரு புதுப் பொலிவு. சிந்தனைச் சிதறல்களிலிருந்து விடுபட்ட மஞ்சு அமைதியாக எழுந்து மெல்லிய இடையை அசைத்த வண்ணம் கொஸ்டலினுள்ளே செல்கின்ருள். அவளது வாழ்க்கையிலே ஒரு புது மலர்ச்சி புகுகின்றது.

சுந்நரா—கற்பிட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றென்றும் வாழுவேன்!

வெண்ணிற ஆடையினால் மூடப்பட்டு, அசையாத நிலையிலே

என்னுடல் படுக்கையிலே கிடக்தப்பட்டிருக்கும் ஓர் நாள் வரும்

அன்றைய நாளிலே வைத்தியர் வந்து இனி எனது இதயமும்,

மூளையும், எனதுடலின் எல்லா உறுப்புகளும், புலன்களும்

இனியொரு போதும் இயங்காது என முடிவு செய்வார்.

அவ்வாறு அவர் முடிவு செய்த பின்னர்.

இயந்திரங்களின் உதவி கொண்டு என்னுடலுக்கு திரும்பவும்

உயிர் கொடுக்கும் முயற்சியில் தயவு கூர்ந்து ஈடுபடாதீர்கள்.

அவ்வாறே எனது அந்தப் படுக்கையை "மரணப் படுக்கையாக கருதாதீர்கள்.

மாறாக, அதை எனது "வாழ்வுப் படுக்கையாக" கருதுங்கள்.

அத்தோடு முடித்து விடாமல்.

ஒரு போதும் அழகாக ஆதவனின் உதயத்தையும், தனது மழலைச் செல்வத்தின்

அழகான முகத்தையும் கண்டறியாத குருடரொருவருக்கு

எனது கண்கள் இரண்டையும் கொடுங்கள்.

தனது இருதயத்தில் வேதனையயன்றி வேறெதையும் உணர்ந்தறியாத ஒருவருக்கு எனது இருதயத்தைக் கொடுங்கள்,

மோட்டார் விபத்திலே சிக்கி உயிரோடு போராடிக் கொண்டிருக்கும்

ஓர் இளைஞர், இரண்டு தலைமுறைகளுக்கு தன் குழந்தைகள் விளையாடுவதைக் காணும் வரை வாழ்வதற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது இரத்தமனைத்தையும் அவ்விளைஞருக்குக் கொடுங்கள்

இயந்திரங்கங்களின் உதவியுடன் வாரத்துக்கு வாரம் வேதனையுடன் காலந்தள்ளும்

சிறுநீரக நோயாளர் ஒருவருக்கு.

எனது சிறுநீரகங்களை தானம் பண்ணுங்கள்,

முடமாகி அடங்கிப் போய்விட்ட குழந்தை யொன்று திரும்பவும் ஓடி விளையாட எனது எல்லா எலும்புகளையும். தசைகளையும் அந்த குழந்தைக்கு கொடுங்கள்.

ஊமையும் செவிடுமாகி விட்ட ஒருவர்,

திரும்பவும் பேசுவதற்கும் செவியின்பத்தைப்பெறு வதற்கும், ஏதுவாக,

எனது மூளையின் கலங்கள் அனைத்தையும் அவருக் குப் பொருத்துங்கள்,

மிகுதியாக ஏதும் இருப்பின் அவற்றை எரித்து; அந்தச் சாம்பலை

பூச் செடிகளுக்கு பசளையாக்கும்படி போடுங்கள்.

புதைப்பதற்கு ஏதும் தேவையானல்

எனது தவறுகளையும்; பலவீனங்களையும் புதையுங்கள்

எனது பாவங்களை சாத்தானிடம் கொடுங்கள்

எனது ஆன்மாவை இறைவனின் கைகளில் ஒப்படையுங்கள்.

ஓ உங்களில் யாருக்காவது என்னை நினைவு கூர வேண் டியது அவசியமானல், யாருக்காவது ஒரு நல்லசெயல் மூலம் உதவி செய்யுங்கள், அல்லது அவரோடு அன்போடு பேசுங்கள், நான் கேட்டவை அனைத்தையும் நீங்கள் செய்வீர்களானல்

நான் வாழ்ந்து கொண்டேயிருப்பேன்

வாழ்ந்து கொண்டேயிருப்பேன்

எப்போதும் வாழ்ந்து கொண்டேயிருப்பேன்

என்றென்றும் வாழ்வேன்,

மைக்கல் ஆர். ஜோக்கிம்
(தழுவல்: ரீடஸ்ட் டஜஸ்ட்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீ யார்....?



நீ யார்......? கேள்வி மிகவும் சுலபமானது போலத்தான் தோன்றுகின்றது. ஆனால் கேள்விகளுக்குள்ளேயே மிக மிக ஆழமான நுட்பமான கேள்வி இது. பதில் கொடுப்பதாயின் சிந்தனையின் ஆழத்தில் இருந்தல்ல ஆனால் உள்ளத்தின் நேர்மையில் இருந்துதான் பிறக்கவேண்டும். அதுதான் கவிஞன் கூறுகின்றான். "நீங்கள் அத்தனைபேரும் உத்தமர்தானா சொல்லுங்கள்." உங்கள் ஆசை நெஞ்சைத் தொட்டுப்பார்த்துச் சொல்லுங்கள்." ஒருவனை நோக்கி திடீரென "நீ யார்?" என்று கேட்டுவிட்டால் அவனைத் தடுமாறவே வைத்து விடுவோம். அவன் உள்ளத்தை குழப்பி அவனின் நாவை புரளாமலே தத்தளிக்க வைத்து விடுவோம். இக்கேள்வியின் பதிலிலும் பதிலின் போக்கிலும் ஒருவன் வாழ்க்கை முழுவதும் தங்கியுள்ளது. அவன் வாழ்நாள் பூராக அனுபவித்த, அனுபவிக்கும் அனுபவிக்கவுள்ள இன்ப துன்பங்களும் கூட இந்த அச்சிலேதான் சுழல்கின்றன. அது மட்டுமல்ல இக்கேள்விகளுக்கு பதில் அளிப்பவனின் உண்மையான கண்ணியமான வாழ்க்கைக்கு வழிகோலும் அன்றேல் அவன் வாழ்க்கையை முற்றிலும் போலியான முகமூடி வாழ்க்கையாக மாற்றிவிடும்.

கலிபோர்னியா சர்வகலாசாலையொன்றில் உதவியாளர்கள் நடாத்திய கருத்தரங்கொன்றில் பங்கு பற்றிய சகாக்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தாளும் ஓர் எழுதுகோலும் கொடுக்கப்பட்டது. ஒரேயொரு கேள்வி மட்டும் கொடுக்கப்பட்டது. "நீ யார்"...... அதிசயிக்கக்கூடிய மாறுபட்ட பதில்கள் ஏராளமாக வந்து குவிந்தன. ஒருவன் யார் நான்? ஏன் இப்படியான விசர்க்கேள்வி. இன்னொருவன் நான் யார்? எனக்குத் தெரியாது. இன்னொருவன், "நான் மற்றவனிலும் பார்க்கக் கொஞ்சம் குறைந்தவன்......" இன்னொருவன்," "ஒரு நாளும் நான் இப்படிப்பட்ட கேள்வியை எதிர்நோக்கவில்லை. ஆயினும் நான் தனிமையில் வாடுகின்றேன்; எனக்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல பிரச்சினைகள் உண்டு. எனக்கு நண்பர்கள், வழி காட்டிகள் யாருமில்லை......"

இப்படிப் பலரும் பலதரப்பட்ட பதில்களை, விளக்கங்களை வழங்கினர். இறுதியாக ஒரு மனைப்பெண் வழங்கிய விடையை உளவியலறிஞர்கள் மிகவும் சிறந்த பொருத்தமான விடையெனக் கொண்டனர். "நான் மேரி; நான்...நான். நானேதான்." ஆம் இது ஓர் பூரண விடையென்றே கொள்ளலாம். உண்மையில் இது ஓர் சிறந்த விடைதான். அதை விட்டு, நான் இப்படி இருக்கவேண்டும், இப்படி என்னை எதிர்பார்க்கின்றார்கள். இப்படி இருந்தால் நன்று, இப்படி நான் இல்லையே......என்றெல்லாம் வீண் கற்பனை உலகில் சஞ்சரிக்க வேண்டியதில்லையே. என்னையும் ஏமாற்றி, மற்றோரையும் ஏமாற்ற நினைப்பதெல்லாம் வீண் மடமையே. ஆகவே முக மூடிகளை அணிந்து கொண்டு வேறொருவன் போல வாழ எண்ணாதே! ஆஞ்சலோ பாட்றிஸ் கூறினார், "ஒருவன் இன்னொருவன் போன்று வாழத் துடித்தால் அந்தத் துடிப்பில் உண்டாகும் வேதனையைப் போன்ற வேதனை கிடையாது. அந்த வேதனையை மாற்றக்கூட முடியாது."

உன்னுடைய வாயில் நீ கொண்டுள்ள பற்கள் உலகத்திலேயே அசிங்கமான பற்கள் என்றாலும், உன்னுடைய முகத்தை விட அவலட்சணமான முகம் இந்த உலகிலேயே இல்லை என்றாலும், வெட்கப்படாதே. அதிகம் கவலைப்படாதே. என்னிடம் உள்ளவை என்னுடையதே. எப்போதும் நான்... நானே தான். என்று எனது தனித்துவத்தை ஏற்றுக் கொள்கின்றேனோ அன்று தான் எனக்கு உள அமைதியும் மனமகிழ்ச்சியும் கிடைக்கும். எனது வாழ்கையிலே உற்சாகமும் புத்துயிரும் பிறக்கும்.

வேலைக்கு விண்ணப்பிக்கும் கூட்டத்தாரை நோக்குங்கள். எத்தனை ஏமாற்றங்கள், சமாளியுங்கள், பச்சைப் பொய்கள் ஏன்...... இந்தக் கோலம்...? கடைசியில், யார் யாரை ஏமாற்றுகின்றார்களோ. யார் ஏமாற்றப் படுகின்றார்களோ...... என்பது புரியாத புதிராகவே இருக்கின்றது. ஒருவன் தன்னிடமிருந்து மற்றவர் என்னென்ன எதிர்பார்க்கின்றார்கள் என நினைக்கின்றானோ அதுதான் அவன் சொல், செயல், நடத்தை அனைத்தையும் ஆளுகின்றது. சுருங்கக் கூறின் 'உலகமே ஓர் நாடக மேடை அதில் ரசிகர் எல்லாம் பாத்திரம்." இப்போ ஒவ்வொரு வாசகரையும் கேட்கின்றேன். உன்நெஞ்சைத் தட்டிச் சொல், உனக்கு நீயே பதில் கூறு: நான் யார்?

ஸ்ரான்—மட்டக்குளி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எ....ண்....ண....ங்....க.... ள்?

* "மற்றவர்களைப் புரிந்துகொள்ள, அவர்கள் சொல்லாதவற்றிற்கும், அவர்கள் சொல்லத்தயங்குவதற்கும், செவி மடுக்கவேண்டும்."

* "மக்களைப்பாவித்து, பொருட்களை அன்பு செய்யவல்லமாறாக, ஆட்களை அன்பு செய்யவும்' பொருட்களைப் பாவிக்கவும், பயிலவேண்டும்."

* "தீர்ப்பளிக்க வேண்டியவன், இருபக்கத்தையும் சீர்தூக்கி ஆராய வேண்டும், இல்லாவிடில், அவன் நீதியாய்த் தீர்ப்பளிக்கினும், அதை நீதியெனக் கருதக்கூடாது."

* "நான் என்னை ஏற்று என்னை வெளிப்படுத்தும், போது நீ உன்னை ஏற்று, திறந்த மனம் கொள்ள, வழி செய்கிறேன்."

* "நான் யார் என்று உனக்குக் கூறினால், நீ ஒருவேளை, என்னை விரும்பமாட்டாய். என்ன செய்வது......? என்னிடம் அவ்வளவுதான் உண்டு."

* "எனது எண்ணங்களை சொல்வதனால், நான் என்னை வகைப்படுத்துகின்றேன். எனது உள்ளுணர்வுகளைச் சொல்வதனால், என்னைப் பற்றியே சொல்லுகின்றேன்.

* நான் எல்லாம் தெரிந்தவன் அல்ல. ஆனால் ஒரு சிலவற்றை ஓரளவு அறிந்தவன். அதனால் என்னால் முடிந்தவற்றை செய்யவேண்டும். செய்யவேண்டியதை நான் செய்வேன்.

தொகுத்தளித்தவர்:- தோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒரு சில வருடங்களுக்கு முன் விஞ்ஞானம் மனிதனைப் பார்த்து சிரித்தது.... ஏன்...?.........?

மனித உடல்;

6. கட்டி சவர்க்காரம் செய்யக்கூடிய சுண்ணும்பு,

1/2 டசின் ஆணி உருக்கக்கூடிய இரும்பு.

20 தீப்பெட்டிகள் செய்யக்கூடிய பொசுபரசு.

10 கோப்பை தேனீர் சுவைக்கக்கூடிய சீனி.

1 விளையாட்டு வெடி செய்யக்கூடிய பொட்டாசியம்.

இன்னும் சொற்பளவு சல்பேற்று.

இன்னும் சில.........ஹ...ஹ...ஹ.

யாவற்றையும் ஒருங்கிணைத்தாலும் 20 ரூபாய்க்கு கூடிய பெறுமதி ஏற்படாது.

"வாழ்க்கையின் குறிக்கோளை ஒருவன் பூரணப் படுத்துகையில் தன்னையே பூரணப்படுத்துகின்முன்.

—விக்ரர் பிராங்—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் 20 ரூபாய் பெறுமதியான, வெறும் சடப்பொருள் மட்டுமல்ல. அவன் புத்தி உணர்ச்சிகள், ஆற்றல்கள் அளவிடற் கரியன. அவன் சக்தி உலகை ஆளவல்லது. அவன் ஆக்கத்திறன், அபிலாசைகள், விருப்பு வெறுப்புகள் பல்வேறு பட்டன. வாழ்க்கைக்கு, குறிக்கோள்கள், கொள்கை கள் அமைத்து, மனித இனத்திற்கே சக்தி ஊட்டி சரித்திரம் படைக்க வல்லவன். பாரையே பனிமழை பொழியும், புதிய பூமி யாகவோ, அன்றேல் கரிக்கும்பலாகவோ, ஆக்கும் தகமையுடையவன். வலிமை வாய்ந்தவன்.

தான் மட்டுமல்ல பலரையும் வாழ வைக்கவும் அன்பு, நேர்மை, உண்மை, தியாகம், பொறுமை, மன்னிக்கும் மனம், முதலிய பெரும் குணங்கள் படைத்தவன். படைப்புக்களுக்குள்ளேயே, அதிசிறந்ததும், நுட்பமானதுமான, படைப்பு அவனே என்றால், அவன் பெருமையும், மகிமையும் தான்

**என்னே......!**

---

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அளித்து, எனது ஆதரவையும், தருவதற்கு ஆவலுடன் காத்திருக்கிறேன்.

எதிர்கால நவீன உலகை, கட்டியெழுப்புவோர் இளைஞர்கள். இதனால் இளைஞனே இளைஞனுக்கு வழி காட்டல் வேண்டும். இப்பணிகளில் ஈடுபட்டுள்ள உங்கள் குழுவுடன், நானும் சேர்ந்து கொள்ளலாம் என்பது தான் எனது அவா.

இவண்,
வெ. வர்ணகுலசிங்கம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுப்பாடும் வாழ்வும்

கட்டுப்பாடென்னும் கருதுகோளை, மனிதன் வாழ்வில் கடைப்பிடிக்கா விட்டால், அவன் வாழ்விலோ, அல்லது வரலாற்றிலோ, முட்டுப்பாட்டையும், மோதலையும் தவிர்க்க முடியாது என்பது தெளிவு. கட்டுப்பாடு என்னும் இந்த மாபெரும் சக்தியால்தான் பாரிய சாதனைகள், சாதிக்க முடிகிறது. கட்டுப்பாடென்னும் இந்த மாபெரும் சக்தியை ஒவ்வொரு கணமும் கண் விழிப்போடு காக்கவேண்டும். இதனால் கட்டுப்பாடு என்ற தத்துவம், வாழ்வோடு பின்னிப் பிணைக்கப்பட்டு கட்டிக்காக்கப்படவேண்டும்.

பூரண இலட்சியத்தின் இலக்கணமாக, இயங்குகின்ற கட்டுப்பாடு எந்த வழிகளில் அமையவேண்டும் என்று கேட்கக்கூடும். மரத்தையும் அதில் எழுகின்ற கறைபடிந்த எண்ணங்களையும், கட்டுப்படுத்துதல் எழிமையான, தூய்மையான, வலிமை வாய்ந்த வாழ்க்கை முறையில் நம்மைப்பயிற்றுதல், அவசியம். வீண் ஆடம்பர வாழ்வில் சுகபோகங்களையும், ஊதாரித்தனமான செலவுகளையும், கட்டுப்படுத்துதல் அவசியம். மூலைமுடுக்குகளில் நின்று காலத்தை வீணுக்குதல், போதைப்பொருட்களில் செல்வங்களை அழித்தல், விழாக்களில் பணத்தையும் காலத்தையும், சன்மானத்தையும் கலங்கப்படுத்துதல் போன்றவற்றிலிருந்து நம்மைக் கட்டுப்படுத்திக் கொள்ளவேண்டும்.

எண்ணங்களில், எழுத்திலும் கூட கட்டுப்பாடு வேண்டும். "கண்போன போக்கிலே மனப் போக்கில் ........" வாழ்வு அழிவிற்கு வழிகோலும். கட்டுப்பாட்டுடனும் பொறுமையுடனும் இருந்து செயலாற்றுபவர்கள் பூமியை ஆள்வார்கள் என்பது, திண்ணம். காலம், இடம், தரம், பலம் அறிந்து செயலாற்றுவதில்தான் கட்டுப்பாட்டின், நிறைவு தங்கியுள்ளது. அகமும் புறமும், கட்டுப்பட்ட ஒருநிலை, உருவாக்கப் படவேண்டும். ஒரு மின் அழுத்தியை, அழுத்தியதும், மின் குமிழிகள், ஸ்கன், எரிகின்றன. மீட்டும் அழுத்தியதும் அணைகின்றன இது ஒரு கணப்பொழுதில் நடைபெறுகின்றது. கட்டளையை நிறைவேற்ற, நாம் பயிலவேண்டும். அவ்வப்போது எழுகின்ற, சிறிய, சிறிய தாக்கங்களைக்கண்டு, அறிவை அடகுவைத்து

(17ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் நானாக....!

[பதிலை யாருக்கும் காட்டவேண்டிய அவசியமில்லை. எனவே உங்களையோ, மற்றவரையோ, திருப்திப்படுத்த வேண்டியதில்லை. ஆகவே உண்மையாக இருங்கள். ஒவ்வொரு வினாவிற்கும், போதியளவு நேரம் செலவு செய்து தீர்மானம் எடுக்கவும்].

1. என் முழுப்பெயர்

* திருப்தியா..ஆம்...?
* அதையேற்க வெட்கமா.........?
* பெருமை அடைகின்றாயா.........?
* அன்றேல் வேதனைப்படுகின்றாயா......?

2. என் வயது

* கூடி விட்டதா.........?
* குறைந்து விட்டதா.........?
* திருப்தியா..ஆம்..?

3. என் சமுதாயம்

* இனம், மதம், மொழி, சாதி, என்பவற்றின் மட்டில் எனது நிலை.........?
* கல்வித்தராதரத்தின் மட்டில் சமுதாயத்தில் எனது நிலை.........?

4. என் நற்பண்புகள்: பிறரை அன்பு செய்வது, அனுதாபம்

5. என் குறைபாடுகள்: கோபிப்பது

6. என் ஆற்றல்கள்: ரசனை, நடனம், விளையாட்டு,

* எவற்றை விருத்தி செய்துள்ளேன் செய்கின்றேன்.

7. என் ஈடுபாடு:

* சொந்த வாழ்வில்
* அடுத்தவர் வாழ்வில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. என் பிரச்சினைகள்

* வரக்கூடாதென்று விரும்புகின்றேனு....
* மனம் சலிப்படைகின்றேனு .....?
* எதிர்நோக்கி வெற்றி அடைகின்றேனு...?

9. என் வாழ்வின் இலட்சியத்தை அடைய வேண்டிய கொள்கைகள்.

10. இறை பக்தி

11. என் அறிவு ஆற்றல், ஆரோக்கியம் என்ப வற்றில் வளர்ச்சி தேர்ச்சி உண்டா...?

12. என் வாழ்க்கையில் சந்தோஷமும் மன நிறைவும் உண்டா...?

குறிப்பு:

எல்லாவற்றிற்கும் திருப்திகரமான பதிலை எதிர் பார்க்க முடியாது. அதேவேளையில், என்னில் உள்ளவற்றின் சிலவற்றை மாற்றவும் முடியாது. (உ+ம்) வயது. ஆனுல் சில வற்றை நல்ல வழியிலோ, தீய வழியிலோ, செலுத்தமுடியும். (உ+ம்) ஆற்றல்கள். ஆகவே சிலவற்றை ஏற்கவேண்டும். சிலவற்றை வளர்க்கவேண்டும்.

---

(15ம் பக்கத் தொடர்)

விட்டு ஆத்திரத்திற்கு ஆளாகக்கூடாது. பொறுமைக்குப், பெயர் கோழைத்தனமல்ல. "ஒரு மீன் ஓடி உறுமீன் வருமளவும் வாடி இருக்குமாம், கொக்கின் பொறுமையும், ஆடாமல் அசையாமல், ஒற்றைக்காலில் நிற்கும் கட்டுப்பாடும் வேண்டும். ஒருத்திக்கு குழந்தை வேண்டும் என்ருல் அவள் முதலில் கருத்தாங்கவேண்டும். பத்துமாதப் பொறுமையோடு, கட்டுப்பாட்டோடு, காத்திருக்கவேண்டும். வேதனையை அனுபவிக்க வேண்டும்.

எனவேதான் கட்டுப்பாடு என்பது, ஓரிருதினங்களில் நம்மிடம் ஏற்பட்டு விடாது அது நீண்டநாள் பயிற்சியின் விளைவே. ஆகவே கடந்தவைகள் கடந்தவைகளாகும். இனி நடக்கப் போபவைகள், நல்லவைகளாக இருக்கட்டும்.

எம். ராஜேஸ்வரி
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தா விபரம்

ஓராண்டு சந்தாப் பணம்—ரூபா 4-00
(தபாற் செலவுட்பட)

தபாற் கட்டளை அல்லது காசுக்கட்டளை மூலம் பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்

"நான்" ஆசிரியர்
அ. ம. தி. இல்லம், அம்பிட்டி.

---

# வெளி வருகிறன்.

புரட்டாசி—ஐப்பசி : "விரக்தி"

கார்த்திகை—மார்கழி : **'FRIENDSHIP—நட்பு'**

உங்கள்: — கதைகள்
— கட்டுரைகள்
— கவிதைகள்
அனைத்தையும்
கீழ்க்காணப்படும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

நான் ஆசிரியர்,
அ. ம. தி. இல்லம்,
அப்பிட்டியா.

---

தாமதம்........

வைகாசி—ஆனி இதழின் விளக்கப் போட்டி 5 இன் முடிவுத் திகதி புரட். 15 ந் திகதிக்குப் பின் போடப்பட்டுள்ளது.

ஆ. கு.

சி. என். பி. லிமிட்டெட், 194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org